[9th September 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*), (*b*) & (*c*) The answer [a] is placed on the table of the House.

* 103 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இம் மாகாணத்தில் எத்தனை விதைப் பண்ணைகள் ஆரம்பித்து நடைபெறுகின்றன ?

(ஆ) இன்னும் அதிக விதைப் பண்ணைகளை ஆரம்பிக்கும் உத்தேச முண்டா ?

(இ) அப்படியானால், எங்கெங்கே ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 154 (one hundred and fifty-four) farms.

(*b*) Yes; it is the intention to open 206 more farms in the current year.

(*c*) It is obviously not possible now to say where the future farms will be located. They will be evenly distributed in the various districts according to the soil composition, irrigation and other facilities that are available and according to the seed crops that are to be grown.

* 104 *Q.*—SRI T. VELUCHAMI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

விவசாயிகளுக்கு பொறுக்கு விதைகளும் பூச்சி மருந்துகளும் கோவாப் பரேடிவ் ஸ்தாபனங்கள் மூலமாக சப்ளை செய்யும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The answer is in the affirmative.

SRI A. VEDARATHNAM : தஞ்சை ஜில்லாவிலே ஏற்படுத்தப் பட்டிருக்கும் இந்த விதைப் பண்ணைகளெல்லாம் வெட் ஏரியாவிலே, அதாவது நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கி கின்றன. அங்குள்ள ட்ரை ஏரியாவில் அதாவது பாசன வசதி இல்லாத மானுவாரிப் பிரதேசங்களில் ஏதேனும் விதைப் பண்ணைகள் உண்டா ? இல்லையானால், ஏற்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி தனியாக கேள்வி கேட்டால் பதில் அளிக்கமுடியும்.

SRI T. VELUCHAMI : இப்பொழுதிருக்கும் நிலைமையில் விவசாய டெமன்ஸ்ட்ரேடர்களுடைய வேலைப் பளுவைக் குறைப்பதாக இருந்தால், அவர்கள் விவசாய அபிவிருத்தி வேலைகளை மிகவும் நன்றாகக் கவனிக்க முடியும். கூட்டுறவு ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியம் கருதியும் விவசாய டெமன்ஸ்ட்ரேடர்களிடமிருந்து அதிக வேலை வாங்கக்கூடிய நிலைமை கருதியும், பொறுக்கு விதைகள், பூச்சி மருந்துகள் போன்றவைகளை கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக விநியோகம் செய்யும் முறையை சர்க்கார் கையாளுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொறுக்கு விதைகளை கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் விநியோகிப்பதுபற்றி இப்பொழுது கவனிக்கப்பட்டு வருகிறது. தேசீய வளர்ச்சித் திட்டங்களில் இரண்டு ப்ளாக்குகளில் இதைப் பரீட்சார்த்தமாக நிறைவேற்றிப் பார்க்கலாம் என்று இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், பூச்சி மருந்துகள் கொடுக்கும் விஷயத்திலே, அதைப்பற்றி கொஞ்சம் டெக்னிகலாக தெரிந்தவர்கள்

---

[a] Printed as Appendix II on page 482 infra.

9th September 1958]

வேண்டும். இதையும் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கே கொடுத்துவிட்டால் அது அவ்வளவு திருப்திகரமாக நடைபெறுது என்ற அபிப்பிராயமும் இருக்கிறது. அதுவும் இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : I understand that there are two kinds of farms—single farms and twin farms. So far as the single farms are concerned, is it a fact that the Government have not sanctioned any staff for looking after these farms?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : It is true that for single farms of 25 acres it was found that it would not be economical to have a Farm Manager. But recently the Government realized the necessity to have proper supervision of these farms and, therefore, they have sanctioned posts of Farm Managers even for these single farms.

Sri T. T. DANIEL : May I know from the Hon. Minister whether at present there are sufficient number of seed farms to meet the requirements of our State? If we have not got sufficient number of seed farms, what is the total acreage of seed farms we require? Have our Government fixed any target in this respect?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : As I pointed out originally, the idea was to have 360 seed farms of 25 acres each. But now with these 154 farms it has been possible to cover nearly 50 per cent of the acreage with pure seed farms. We are now reviewing the whole position so as to see whether we could not reduce our target so that whatever is required to cover the entire area, we might have seed farms only to that extent and not more.

Sri R. SRINIVASA IYER : எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலில், விலை கொடுத்து விதைப் பண்ணைகளுக்காக நிலம் வாங்கப் பட்ட ஜாபிதா கொடுக்கப்பட்டிருக்கிறது. வருஷ குத்தகை ஏற்பாட்டுக்கு நிலம் வாங்கி, அங்கே விதைப்பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா? அப்படி குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் என்ன? வருஷவாரிக் குத்தகை ஏற்பாடு இருக்கும் இடங்களில் சராசரி எவ்வளவு குத்தகை கொடுக்கப்படுகிறது என்று சொல்ல முடியுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இருக்கும் 154 விதைப் பண்ணைகளிலே, இப்பொழுது விலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது போக மீதியெல்லாம் குத்தகைக்குத்தான் இருக்கிறது. முதலிலே குத் தகை அடிப்படையிலே எவ்வளவு தூரம் திருப்திகரமாக இருக்கிறதென் பதைப் பார்த்து, அதற்குப்பிறகுதான் விலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும். விலைக்கு எடுத்துக்கொள்ளவதும், ஒரு அளவு தான்எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது அபிப்பிராயம்.

Sri V. SUBBIAH : 154 பண்ணைகளில் கிரயம் செய்யாத நிலங்களுடைய மதிப்பைவிட கட்டுக் குத்தகையானது கூடுதலாக இருக்கிறதென்று கேள்விப் படுகிறேன். அப்படி யென்றால், எத்தனை இடங்களில் அப்படி இருக்கிறது என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதெல்லாம் இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. நான் முன்பு குறிப் பிட்டதுபோல், சட்டசபையின் எஸ்டிமேட் கமிட்டி இதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அவர்களுடைய ரிபோர்ட் வந்ததும் அதற்குமேல் கவனம் செலுத்தப்படும்.

[9th September 1958

SRI T. SAMPATH : அரசாங்கம் நடத்திவரக்கூடிய சில விதைப் பண்ணைகளில் உற்பத்திசெய்கின்ற விதைகள் சரிவர முளைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. அந்தப் புகார் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? இந்தப் புகார் உண்மையாக இருந்தால், அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுவரை அத்தகைய புகார் என்னிடம் வரவில்லை.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : விதைப் பண்ணைக்காக குத்தகைக்கோ, கிரயத்திற்கோ எடுத்துக் கொள்ளும் நிலங்கள் அங்கு சாகுபடி செய்யக் கூடிய வார சாகுபடியாளர்களுக்குக் குந்தகம் இல்லாமல் எடுத்துக் கொள்ளப்படுமா ? அதற்குத் தக்க பாதுகாப்பு இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிறிய சாகுபடியாளர்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் தான் இது எடுத்துக் கொள்ளப்படுகிறது.

SRI P. U. SHANMUGAM : திருவண்ணாமலை தாலூக்காவில் உள்ள விதைப் பண்ணை இருக்கும் நிலத்தை கிரயத்திற்கு எடுத்துக்கொண்டாகிவிட்டதா ? அப்படியானால் அந்தக் கிரயம் ஏன் இந்தப் பட்டியலில் கொடுக்கப்படவில்லை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

SRI A. VEDARATHNAM : அந்த விதைகள் எந்த முறையில் தயார் செய்யப்படுகிறது ? ஜப்பானிய முறையைக் கையாண்டால் ஒரு ஏக்கருக்குப் பத்து பவுண்டு விதை போதும் என்று கூறப்படுகிறதே. இந்த சிக்கனத்தால் 40 கோடி ரூபாய் விதையில் மாத்திரம் மிச்சம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறதே. அந்த ஜப்பானிய முறையைக் கையாள்வது பற்றி பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜப்பானிய முறைபடி தான் இந்தப் பண்ணைகள் செயல்படுகின்றன.

SRI K. PONNIAN : தலைவர் அவர்களே, நெல் போன்ற தானியங்களுக்குத்தான் இந்த விதைப் பண்ணை இருப்பதாக அறிகிறேன். அன்னிய நாட்டுச் செலாவணியைத் தேடித் தருகிற காப்பி, தேயிலை, ஏலம் போன்றவைகளுக்கும் விதைப் பண்ணைகள் இருக்கின்றனவா ?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் தனிக் கேள்விதான் போட வேண்டும். அமைச்சர் பதில் அளிப்பதாக இருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மாதிரி காப்பி, தேயிலை, ஏலம் போன்றவைகளுக்கு விதைப் பண்ணைகள் இல்லை.

Sports Stadium

* 105 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any sports stadium at Tiruchirappalli;

(*b*) whether any representation has been received from (i) The Tiruchirappalli United Cricket Club in 1957 and (ii) The Tiruchirappalli Municipal Council in February 1958, for the construction of a Cricket Stadium at Tiruchirappalli; and

(*c*) if so, the action taken thereon?